2013 ஏப்ரல் 29]

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தில் இருக்கிற என்னுடைய தொகுதியிலே ஒரு தொழிற்சாலை என்கிற முறையில், ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலையை அமைத்துத் தந்தால், ஒரு தொழிற்சாலை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது என்கிற பெருமை எங்களுக்கு ஏற்படும். அந்தப் பெருமை உங்களுக்கும் ஏற்படும் என்பதைக் கவனத்தில்கொண்டு, பல விதிகளைத் தளர்த்தி, எப்படியாவது அந்தப் பகுதியிலே ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கான முயற்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல, அங்கே அமைப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்வதற்கு மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 339, மாண்புமிகு உறுப்பினர் திரு சு. ரவி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

339—

சத்துணவுக் கூடம்

*18867—திரு. சு. ரவி:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் பின்கொணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் காலனியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதிய சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரக்கோணம் தொகுதி, சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் காலனியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதிய சத்துணவுக் கூடம் அமைக்க இருப்பறையுடன்கூடிய சமையலறை கட்டும் பணி முடிக்கப்பட்டு தற்பொழுது வண்ணம் பூசுதல் மற்றும் கதவு பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கேற்ப, அடித்தட்டு மக்களின் வறுமையைப் போக்கிட உறக்கமின்றி உழைத்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, அறிவுப் பசிக்கு கல்வி கொடுத்ததைப்போல், வயிற்றுப் பசிக்கு குபேர வீட்டுப் பிள்ளைகள் உண்ணும் உணவை குடிசை வீட்டுப் பிள்ளைகளும் உண்ண வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத் திட்டத்திலே மகத்தான மாற்றம் கொண்டுவந்து, 13 வகையான கலவை சாதங்களை வழங்கிட வரலாற்றுத் திட்டம் வழங்கி, வாழும் வள்ளலாக, வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக விளங்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட சயனபுரம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குப் புதிய சத்துணவுக் கூடம் வேண்டும் எனக் கேட்ட மாத்திரத்திலேயே, புதிய சத்துணவுக் கூடம் கட்டித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தக் காலனியிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளியிலே பயில்கின்ற குழந்தைகளுக்கு சுமார் முக்கால் கிலோ மீட்டர் தொலைவிலுள்ள

சவணபுரம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியிலிருந்து சத்துணவு கொண்டுவந்து கொடுக்கப்படுகிறது. இதனால் குழந்தைகளுக்குக் குறிப்பிட்ட நேரத்திலே உணவு வழங்குவதிலே, சில நேரங்களிலே காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, அங்கே புதிதாகக் கட்டப்பட்டுள்ள அந்த சத்துணவுக் கூடத்திலேயே புதிதாக ஒரு சத்துணவு மையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் 25 மாணவ, மாணவியர்கள் சத்துணவு சாப்பிடுவதற்கு விருப்பம் தெரிவித்தால், சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர், மாவட்ட ஆட்சித் தலைவர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அந்த உள்ளூரிலேயே மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் புதிதாக சத்துணவு மையம் தொடங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் காலனிப் பகுதியிலே சத்துணவு மையம் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. ரவி அவர்கள்.

திரு. க. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு சத்துணவு மையம் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்ற நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 340, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.